## பாடம்: 8 - நட்பே உயர்வு

**வகுப்பு : III**

**பாடம் : தமிழ்**

**அ. சரியான விடையைத் தெரிவு செய்வோமா?**

1. 'இரை' என்ற சொல்லின் பொருள் ....................

(அ) உணவு (ஆ) இருப்பிடம் (இ) மலை (ஈ) இறைவன்

2. 'மகிழ்ச்சியுடன்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................

(அ) மகிழ்ச்சி + யுடன் (ஆ) மகிழ்ச்சி + உடன்

(இ) மகிழ் + உடன் (ஈ) மகிழ்ச் + சியுடன்

3. சொல்லி + கொண்டு - இச்சொற்களைச் சேர்த்து எழுதக் கிடைப்பது .....................

(அ) சொல்லிக்கொண்டு (ஆ) சொல்கொண்டு

(இ) சொல்லக்கொண்டு (ஈ) சொல்லிகொண்டு

4. 'முதுமை' என்ற சொல்லின் எதிர்ச்சொல் ................

(அ) தீமை (ஆ) சிறுமை (இ) பெருமை (ஈ) இளமை

5. 'சூழ்ச்சி 'என்ற சொல்லுக்குக் கதையின்படி தொடர்புடைய விலங்கு ..................

(அ) மான் (ஆ) முயல் (இ) நரி (ஈ) சிங்கம்

**ஆ. வினா விடை.**

**1. முயல் எந்த விலங்குடன் நண்பனாகப் பழகியது?**

முயல் மானுடன் நண்பனாகப் பழகியது.

**2. மானை விட்டுவிடுவதற்காக நரி என்ன செய்தது?**

மானை விட்டுவிடுவதற்காக நரி மூன்று புதிர்களைக் கூறி அதற்கான விடைகளைக் கூறுமாறு முயலிடம் சொன்னது.

**3. மான் எதனால் மாட்டிக்கொண்டது?**

நரியின் சூழ்ச்சி தெரியாமல் மான் மாட்டிக் கொண்டது.

**4. மற்ற விலங்குகள் நரியிடம் நட்பு கொள்வதை ஏன் தவிர்த்தன?**

நரி தந்திரம் மிக்க விலங்கு அதனால் மற்ற விலங்குகள் நரியிடம் நட்பு கொள்வதைத் தவிர்த்தன.

**இ. முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தி எழுதுக.**

1. செல்லலாம் இரைதேடச் புல்வெளியில்

புல்வெளியில் இரைதேடச் செல்லலாம்.

2. அழைத்துச் நண்பனை செல்கிறாய் எங்கு

நண்பனை எங்கு அழைத்துச் செல்கிறாய்

3. கட்டை முதுமையில் உயரம் இளமையில

இளமையில் உயரம் முதுமையில் கட்டை.

## ஈ. புதிருக்குப் பொருத்தமான படத்தைப் பொருத்துக.

1. உணவை எடுத்திடுவாள்
உண்ணாமல் வைத்திடுவாள்
உடல் மெலிந்த பெண்– அவள் யார்?

2. வெள்ளையாம் வெள்ளைக்குடம்
விழுந்தால் சல்லிக்குடம். அது என்ன?

3. கொடிகொடியாம் பூங்கொடியாம்
கிளிதின்னும் பழம் இதுவாம்– அது என்ன?

4. தட்டு தங்கத் தட்டு
தகதகக்கும் வெள்ளித்தட்டு
தலைக்குமேல் உலாவரும் –அது என்ன?

5. ஆயிரம் அறை கொண்ட
மிகப்பெரிய மிட்டாய் கடை – அது என்ன?







## உ. நெடிலைக் குறில் ஆக்குக

1. கானல் - கனல்
2. வாடை - வடை
3. ஆடை - அடை
4. தோடு - தொடு
5. கோடு - கொடு
6. பால் - பல்

KOSAVAPATTY
KNOWLEDGE IS POWER

## ஊ. ஒரு சொல் பல பொருள் அறிக.

1. உலகம்
2. தரணி
3. ஞாலம்
4. பார்
5. அகிலம்
6. பூமி
7. வையம்

